"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.3,846,91,72,000/–, மூலதனக் கணக்கில் ரூ.414,43,96,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.40,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

6. அரசினர் தீர்மானங்கள்

(அ) பேரவைக் குழுக்களின் பதவிக் காலத்தை ஓராண்டுக்கு நீட்டித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2021–2022 ஆம் ஆண்டிற்காக அமைக்கப்பெற்ற மதிப்பீட்டுக் குழு, பொதுக் கணக்குக் குழு, பொது நிறுவனங்கள் குழு, பேரவை விதிகள் குழு ஆகிய குழுக்களின் பதவிக் காலத்தை நீட்டித்தல் குறித்த தீர்மானத்தை முன்மொழிதல். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2021–2022 ஆம் ஆண்டிற்காக அமைக்கப்பெற்ற மதிப்பீட்டுக் குழு, பொதுக் கணக்குக் குழு, பொது நிறுவனங்கள் குழு, பேரவை விதிகள் குழு ஆகிய குழுக்கள் எடுத்துக் கொண்ட பணிகள் இன்னமும் முற்றுப்பெறவில்லை. ஆதலால், ஒவ்வொரு நடப்பு ஆண்டின் இறுதியில் மேற்படி குழுக்களின் பதவிக் காலம் முடிவடைய வரையறுக்கும் பேரவை விதிகள் முறையே 195(2), 203(3), 211(3) மற்றும் 256(2) ஆகியவற்றைத் தளர்த்தி, அக்குழுக்களில் தற்போது பணியாற்றுகின்ற உறுப்பினர்களே தொடர்ந்து 2023 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் முடிய பணியாற்ற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மதிப்பீட்டுக் குழு, பொதுக் கணக்குக் குழு, பொது நிறுவனங்கள் குழு, பேரவை விதிகள் குழு ஆகிய குழுக்களின் பதவிக் காலம் 31–3–2023 வரை நீட்டிக்கப்படுகிறது.

பிற்பகல் 2–40

அடுத்து, 2021–2022 ஆம் ஆண்டிற்காக அமைக்கப்பெற்ற சட்ட விதிகள் ஆய்வுக் குழு, அரசு உறுதிமொழிக் குழு, அவைக் குழு, மனுக்கள் குழு, பேரவை நூலகக் குழு, பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு, அவை உரிமைக் குழு, அலுவல் ஆய்வுக் குழு ஆகிய குழுக்களின் பதவிக் காலத்தை நீட்டித்தல் குறித்த தீர்மானத்தை முன்மொழிதல். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2021–2022 ஆம் ஆண்டிற்காக அமைக்கப்பெற்ற சட்ட விதிகள் ஆய்வுக் குழு, அரசு உறுதிமொழிக் குழு, அவைக் குழு, மனுக்கள் குழு, பேரவை நூலகக் குழு, பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு ஆகிய குழுக்கள் எடுத்துக்கொண்ட பணிகள் இன்னமும் முற்றுப்பெறவில்லை. ஆதலால், ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியில் மேற்படி குழுக்களின் பதவிக்காலம் முடிவடைய வரையறுக்கும் பேரவை விதிகள் முறையே 239(2), 248(2), 253(2), 261(3), 264(2) மற்றும் 268(iv) ஆகியவற்றை தளர்த்தி, அக்குழுக்களில் தற்போது பணியாற்றுகின்ற உறுப்பினர்களே தொடர்ந்து 2023 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் வரை அக்குழுக்களில் பணியாற்ற வேண்டும். மேலும், பேரவை விதி 227(2)–ஐ தளர்த்தி அவை உரிமைக் குழுவில் தற்போது பணியாற்றி வரும்

2022 மே 6] [திரு. துரைமுருகன்]

உறுப்பினர்களே அடுத்த குழு தேர்ந்தெடுக்கப்படும் வரையிலும் மற்றும் பேரவை விதி 231(2)-ஐ தளர்த்தி அலுவல் ஆய்வுக் குழுவில் தற்போது பணியாற்றிவரும் உறுப்பினர்களே அடுத்த குழு நியமனம் செய்யப்படும் வரையில் பணியாற்ற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்ட விதிகள் ஆய்வுக் குழு, அரசு உறுதிமொழிக் குழு, அவைக் குழு, மனுக்கள் குழு, பேரவை நூலகக் குழு, பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு ஆகிய குழுக்களின் பதவிக் காலம் 31-3-2023 வரை நீட்டிக்கப்படுகிறது.

அவை உரிமைக் குழு மற்றும் அலுவல் ஆய்வுக் குழு உறுப்பினர்கள் தொடர்ந்து பணியாற்றுவார்கள்.

(ஆ) பேரவை விதி 32-ஐத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நாளை (7-5-2022) சனிக்கிழமை அன்று வினாக்கள்-விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ நாளை (7-5-2022) சனிக்கிழமை அன்று தளர்த்தி, அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*